23 65 52

சுற்றறிக்கை இல: 07/99

எனது இல: என்ஈபி/சிஒ/எஸ்எ/பி-02
கூட்டுறவுத்திணைக்களம்,
திருகோணமலை.
28.12.1999.

சகல ப.நோ.கூ.சங்கங்களினதும்,
இரண்டாம்படி கூட்டுறவுச் சங்கங்களினதும்,
பனைதென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களினதும் தலைவர்களுக்கும்.

அன்புடையீர்!

ப.நோ.கூ.சங்கங்களினதும் இரண்டாம்படி கூட்டுறவுச் சங்கங்களினதும் பனைதென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களினதும் இயக்குனர்சபை கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான படிகளும், பிரயாணச்செலவுகளும்.

---

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினதும், இரண்டாம்படி கூட்டுறவுச் சங்கங்களினதும் பனைதென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குனர்சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் இயக்குனர்களின் படிகள் பின்வருமாறு திருத்தம் செய்கின்றேன்.

2.1. இயக்குனர்சபைக் கூட்டங்களுக்கு கலந்துகொள்வதற்காக் இயக்குனர்களுக்கு உணவுப்படிகள் உட்பட மாதம் ஒன்றிற்கு உச்ச எல்லை ரூ.600/-க்கு உட்பட ஒரு கூட்டத்திற்கு ரூ.200/-வீதம் பொதுவான படி ஒன்றினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

2.22 இலாபத்தில் இயங்கும் மேற்குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குனர்சபைக் கூட்டங்களுக்கு ரூ.50/-வீதமான படியொன்றினை மாதமொன்றிற்கு உச்சஎல்லையாக ரூ.150/-வுக்கு உட்படப் பெற்றுக்கொள்ள முடியும். இவ்விலாபத்தினைக் கணிக்கும்பொழுது கிராமிய வங்கிப் பிரிவினை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பதுடன், ஏனைய பிரிவுகளின் மொத்த மேலதிகக் குறைவுகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும். மேலே காட்டப்பட்ட பொதுவான படியினை செலுத்துவதுடன் மாதஇறுதியில் படிவம் 28இன் அடிப்படையில் கணிப்பீடுசெய்து கிராமிய வங்கிப்பிரிவு தவிர்ந்த மொத்த மேலதிகத்தினைப்பற்றி கணக்காளரினால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மேலதிகக் கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

2.3. இப்படியினைப் பெற்றுக்கொள்வதற்கு குறைந்தபட்சம் இரண்டு மணித்தியாலங்களுக்கு குறையாமல் கூட்டத்தில் கலந்துகொண்டிருத்தல் வேண்டும்.

2.4. இயக்குனர் சபைக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக அவரால் பொது வாகனங்களில் பிரயாணம் செய்ததற்கு செலவிட்ட தொகையினை பிரயாணச்செலவாகப் பெற்றுக்கொள்ளலாம். சொந்த வாகனத்தை வைத்திருக்கும் இயக்குனர் ஒருவருக்கு ஒருகிலோ மீற்றருக்கு ரூ.2/-வீதம் பெற்றுக் கொள்ளலாம்.

03. மேற்குறிப்பிட்ப்பட்ட திருத்தப்பட்ட படிகளின் ஏற்பாடுகளை உள்ளடக்கிய நடைமுறை விதிகள் சங்கத்தின் பொதுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே இக்கொடுப்பனவுகள் செல்லுபடியாகும்.

04. இயக்குனர் கூட்டப்படியினை இயக்குனர் என்ற அடிப்படையில் தலைவரும் பெற்றுக் கொள்ளலாம்.

05. இக்கொடுப்பனவினை 2000.01.01.ம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

06. இக்கொடுப்பனவு தொடர்பாக எனது 2/90 இலக்கமும் 1990.05.29ம் திகதியும் கொண்ட சுற்று நிருபம் இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

(ஒப்பம்)
க.சிவசிதம்பரம்,
கூ.அ.அணையாளரும்,
கூ.ச.பதிவாளரும்(வகி)

பிரதி: சகல கூ.அ.உ.ஆணையாளர்களுக்கும்.